விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 036 வள்ளுவர் ஆண்டு 2054 தை 10 செவ்வாய்க்கிழமை (24.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## உயர்தரப் பரீட்சையின்போது மின்வெட்டை அமுலாக்காதீர்
### மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

உயர்தர பரீட்சைகள் நடைபெறும் ஜனவரி 23, 2023 முதல் பெப்ரவரி 17, 2023 வரை மின்வெட்டுகளை எந்த நேரத்திலும் திட்டமிடுவதைத் தவிர்க்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இதன்மூலம் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள் தங்களது கல்வி உரிமையை தடையின்றி 11

## யாழில் 80 ஏக்கர் காணிகள் 2 மாதங்களுக்குள் விடுவிப்பு
### ஜனாதிபதி செயலக அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவம் வசமுள்ள 80 ஏக்கர் காணிகள் எதிர்வரும் 2 மாத காலப்பகுதியில் விடுவிக்கப்படும் என யாழ்.மாவட்டத்துக்கு விஜயம்செய்த ஜனாதிபதி செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வருகை தந்த உயர் அதிகாரிகளுடன் யாழில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்து 11

### நிதி நெருக்கடியுள்ளதாக திறைசேரி அறிவிக்கவில்லை
# திட்டமிட்ட வகையில் தேர்தல் நடைபெறும்
## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்



(கொழும்பு)

திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்தப்படும். நிதி நெருக்கடி உள்ளது என திறைசேரி இதுவரை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவில்லை என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமையல் எரிவாயுவின் விலை 500 ரூபாயால் அதிகரிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன .

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை பெருமளவில் அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக அடுத்த மாதம் 11

### புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில்
## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட இரணைப்பாலை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு இளைஞர்கள் காயமடைந்துள்ளார்கள்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன் 11

## பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளில் மூழ்கடிக்கும் மின்வெட்டை நிறுத்துக
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளில் மூழ்கடிக்கும் மின்வெட்டை நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் ஆரம்ப நாளிலும் மின்சாரத்தை துண்டிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 11

### மன்னார் பேசாலை கடற்கரையில்
## கிளிநொச்சி மீனவரின் சடலம் கரையொதுங்கியது

(மன்னார்)

மன்னார் பேசாலை கடற்கரையில் இருந்து கடந்த 20 ஆம் திகதி மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட மீனவர் கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்த தற்போது பேசாலை பகுதியில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தரான 26 வயதுடைய கஸ்டார் அலெக்ஸ் என் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-7,285)

## வடக்கில் செயலாளர்கள் இடமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக நேற்றைய தினம் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் உள்ளூராட்சித் தேர்தல் 11

## இனப் பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வே அவசியம்
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழர்களது தேசிய பிரச்சினையை தீர்க்கும் வகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை இந்த அரசு வழங்க வேண்டும். அதைத் தர தவறி வெறும் ஏமாற்றுக்களை இந்த அரசாங்கம் செய் 11

### தேர்தல் மக்களுக்கான உரிமை
## எவரும் அதனை தட்டிப் பறிக்க முடியாது
### விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் என்பது மக்களுக்கான உரிமை எனவும் அதனை எவரும் தட்டிபறிக்க முடியாது எனவும் தேசிய மக்கள்" சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக 11

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு வழமை போல் சம்பளம் வழங்கப்படும்

(கொழும்பு)

அரச சேவையாளர்களுக்கான வேதனத்தை எதிர்வரும் 25ஆம் திகதி வழமை போன்று செலுத்த முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசசேவையாளர்களுக்கான வேதனம் எதிர்வரும் 25ஆம் திகதி அல்லது அதற்கு மறுநாள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் இல்லாத அரச பணியாளர்களுக்கான வேதனம் எதிர்வரும் 25ஆம் திகதி செலுத்தப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது நிறைவேற்று அதிகாரம் இல்லாத சகல சேவையாளர்களுக்குமான வேதனத்தை செலுத்துவதற்கான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 7 பில்லியன் ரூபாய் பணமும் விரைவில் வழங்கப்படும். எனவே பாரிய பிரச் சினை ஏற்படாது. இந்த விடயத்தில் தேவையற்ற விதத்தில் அச்சமடைய தேவையில்லை என்றார். (ம-7)


## மணமகள் தேவை

சொந்தமாக கடைவைத்திருக்கும் மணமகனுக்கு தகுந்த படித்த மணமகள் தேவை.

1991.04.02 விஷாகம் 1ஆம் பாவம் 2 1/2

தொடர்பு : 074 386 9389

(14388)


## கசிப்புடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)


யாழ்தெல்லிப்பழை - வீமன்காமம் பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் 37 வயதான குறித்த பெண் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 40 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்கள் பொலிஸாரால் மீட்க்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்திக் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி த.தமிழ்ச்செல்வி அவர்களின் அன்புக்கணவர்

### அமரர் மகேஸ்வரன் தனேசன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் (14382)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.சிஜெயதர்மினி அவர்களின் அன்புத் தாயார்.

### தியாகராஜா தங்கராணி

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர். (C-5836)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும் திரு எஸ்.விஜிதன் அவர்களின் அன்புத் தந்தையார்

### வைத்தியலிங்கம் ஸ்கந்தராஜா

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர். (C-5836)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி ஙாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(14375)

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 986 5457, 077 814 7389



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

(14375)

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 814 7389, 077 986 5457


## மரண அறிவித்தல்

### திருமதி சங்கரநமசிவாயம் தையல்நாயகி

தோற்றம் 27 • 02 • 1941



மறைவு 21 • 01 • 2023

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரநமசிவாயம் தையல்நாயகி கடந்த (21.01.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை கமலாம்பிகை தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற சங்கரநமசிவாயம் அவர்களின் மனைவியும், ஜெயராஜின் (சுவிஸ்) அன்புத்தாயாரும், ஜெயந்தியின் (சுவிஸ்) அன்பு மாமியாரும், சாய்ராஜ் (சுவிஸ்), சாய்நாத் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2023) புதன்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள இன்பம் மலர்ச்சாலையில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில். (14384) தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற் பயிர்களில் அதிகரிக்கும் நோய்த்தாக்கம்; மீண்டும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம்

## ருஹூணு பல்கலைக்கழகம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**தற்போது நெற் பயிர்ச்செய்கையில் பரவி வரும் இலை மஞ்சள் நோய் தொடர்ந்து அதிகரித்து வந்தால் எதிர்காலத்தில் நாடு அரிசிப் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் என ருஹூணு பல்கலைக்கழகத்தின் பயிர் விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர் அருண குமார தெரிவித்துள்ளார்.**

இலை மஞ்சள் நோய் என்பது, நோய்த்தாக்குதலுக்கு உட்பட்ட பயிரின் இளம் இலைப்பரப்பில் முதலில் சிறிய புள்ளிகள் தோன்றி, படிப்படியாக இலை முழுவதும் பரவி ஒளிரும் மஞ்சள் நிறத்தில் ஆங்காங்கே பச்சைப் புள்ளிகளுடன் மஞ்சள் நிற தேமல் படலங்களாக மாறிவிடும்.

கடந்த இளவேனிற் காலத்திலும் அதிக அறுவடை குறைந்துள்ளதாலும் தற்போது நெற்பயிர்ச் செய்கையில் பரவி வரும் இந்த நோயாலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# சுதந்திர தின நிகழ்வுகளை எதிர்த்து கறுப்பு நாடாக்களுடன் களமிறங்கிய ஹிருணிகா

(கொழும்பு)

நாடு தீராத பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்நிலையில் 200 மில்லியன் ரூபாவை செலவிட்டு சுதந்திர தினத்தினை நடத்துவதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் மைதானத்தில் அமைக்கப்பட்டு வரும் மேடைக் கம்பங்களில் கறுப்பு நாடாக்களை கட்டி தனது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்.

நாடு பொருளாதார ரீதியாக அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. பிள்ளைகளுக்கு சாப்பிட சாப்பாடு இல்லை என மக்கள் அவதியுறும் இந்நிலையில் அரசின் இந்தச் செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்திருந்தார். (நி)



# சீனா தொடர்பில் வதந்திகளை கிளப்ப வேண்டாம்

## அமெரிக்க தூதுவரிடம் கோரிக்கை விடுக்கும் சிங்கள தேசியவாத அமைப்பு

(கொழும்பு)

இலங்கைக்குள் சீனா தொடர்பாக போலியான பீதியை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என சிங்கள தேசியவாத அமைப்பான தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

சீன அரசின் நடவடிக்கைகளே இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான நெருக்கடி அதிகரிக்கக்காரணம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஐக்கிய இராச்சியத்தின் தொலைக்காட்சி ஒன்றிடம் கூறியிருந்தார்.

இது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்க்கிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள குணதாச அமரசேகர, இலங்கைக்குள் சீனா தொடர்பில் போலியான பீதியை உருவாக்க முயற்சிக்க வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவுக்கு எதிராக குற்றம் சுமத்துவதன் மூலம் அந்நாட்டுக்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்ப்பை உருவாக்கவும் சீன அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் பரஸ்பர எதிர்ப்பை உருவாக்க நீங்கள் முயற்சித்துள்ளீர்கள் என்ற நியாயமான குற்றச்சாட்டை சுமத்த முடியும்.

சீன அரசாங்கம், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பொதுக் கொள்கைக்கு அமைய ஒத்துழைப்பு வழங்க ஏற்கனவே இணங்கியுள்ளது.

இதனை தவிர எரிபொருள், மருந்து, உணவு, பாடசாலை சீருடை போன்ற பெரிய உதவிகளை வழங்கி நெருக்கடியை எதிர்நோக்கும் மக்களுக்கும் அரசுக்கும் சீனா ஒத்துழைப்புக்களை வழங்கி வருகிறது.

நீங்கள் இவற்றுக்கு தடையேற்படுத்தி, இலங்கையை மேலும் நெருக்கடிக்குள் தள்ள முயற்சித்து வருகின்றீர்களோ என்ற கேள்வியை எழுப்புகிறோம்.

இலங்கையில் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்ற நீங்கள் மேற்கொண்ட தலையீடுகள் தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்களுக்கு அமைய இவ்வாறான கேள்வியை எழுப்புவது தர்க்க ரீதியானது என குணதாச அமரசேகர, இலங்கைக்கான அமெரிக்க தூதுவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (நி)

# தேர்தல் சட்டங்களை மீறக்கூடாது

## தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

அனைத்து தரப்பினரும் தேர்தல் சட்டங்களை மீறாது செயற்பட வேண்டும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

உயர்தர பரீட்சார்த்திகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் வேட்பாளர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடனேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் சரியான பாடத்தை புகட்டுவோம்

## சம்பிக்க சவால்

(கொழும்பு)

பின்வாசல் வழியாக அரசாங்கத்தின் ஆட்சியை முன்னெடுக்கும் ராஜபக்ஷவினருக்கு இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மறக்க முடியாத பாடத்தை கற்பிக்க போவதாக 43 ஆவது படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பில் அச்சம் கொண்டுள்ள அரசாங்கம் அதனை ஒத்திவைக்க பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வருகிறது. அரசாங்கத்தின் இந்த முயற்சி இன்னும் முடியவில்லை.

கடந்த ஆண்டு நாடு வங்குரோத்து அடைந்தது. இதனையடுத்து கடந்த மே மாதம் 9 ஆம் திகதி மக்கள் பொதுஜன பெரமுனவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்கள் நேரடியான போராட்டத்தின் மூலம் அதிகாரத்தில் இருந்து இறக்கினர்.

ஜூலை 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து இறக்கினர். தற்போது இவர்கள் பின்வாசல் வழியாக வந்து உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகளை ஆளுநர்கள் ஊடாகவும் கட்டுப்படுத்துவதுடன் பாராளுமன்றத்தையும் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

இம்முறை பொதுஜன பெரமுனவுக்கும் ராஜபக்ஷவினருக்கும் மறக்க முடியாத மக்கள் ஆணை கிடைக்கும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# இரண்டு ரூபாய் நாணயத்தாள் பல இலட்சங்களுக்கு ஏலம்




(கொழும்பு)

இலங்கையின் பழம்பெரும் நாணயத்தாள் ஒன்று பல இலட்சங்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள நாணயத்தாள் இரண்டு ரூபாய் பெறுமதியுடையது. மேலும் இந்த நாணயத்தாள் இலங்கையில் அச்சிடப்பட்ட ஏனைய நாணயத்தாள்களிலும் விட தனித்துவமானதும் சிறப்பு வாய்ந்ததும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1917ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இந்த இரண்டு ரூபாய் நாணயத்தாளின் பின்புறம் அச்சிடப்படவில்லை என்பதுதான் இதன் சிறப்பு. இந்த நாணயத்தாளின் முன் பக்கம் மட்டும் அச்சிடப்பட்டுள்ளது.

அதன் பின்புறம் வெள்ளை நிறத்தில் இருக்கும். இலங்கை சுதந்திர முத்திரை ஆர்வலர்கள் சங்க உறுப்பினர் எஸ். என். ஜாக்சன், பழைய நாணயத்தாள்களின் ஏலத்தில் இந்த வகை நர்ணயத்தாள்களுக்கு அதிக மதிப்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (நி)

# உலக நாடுகளில் பரவும் லஸ்ஸா வைரஸ் நைஜீரியாவில் 105 பேர் அடையாளம்

(நைஜர்)

நைஜீரியாவில் 105 பேர் லஸ்ஸா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 369 பேர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 2 மற்றும் 15 இற்கு இடையில் பதிவாகியுள்ளன மற்றும் நைஜீரியாவின் 10 மாநிலங்களுக்கு பரவியதாக கூறப்படுகிறது.

கொறித்துண்ணிகள் மூலம் பரவும் எபோலா, மார்பர்க் போன்ற கொடிய வைரஸ், நைஜீரியாவின் வடகிழக்கு போனோ மாநிலத்தில் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.

காய்ச்சல், தலைவலி, தொண்டை வலி, இருமல், வயிற்றுப்போக்கு, தசை வலி, நெஞ்சுவலி போன்றவையும் இந்த லஸ்ஸா நோயின் அறிகுறிகளாகும் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷப் பண்ட் எனதருகில் வேண்டும் ரிக்கி பொன்ரிங் உருக்கம்



கார் விபத்தில் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ரிஷப் பண்ட், முதற்கட்ட சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

சமீபத்தில்தான் டேராடூனில் இருந்து மும்பையில் உள்ள மேக்ஸ் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இன்னும் 4 வாரங்களில் மேலும் ஒரு அறுவைச் சிகிச்சை இருப்பதாக தெரிகிறது. தசைநார் கிழிந்துள்ளதால் ரிஷப்பண்ட் பழைய உடற்தகுதிகளைப் பெற்று குணமடைந்து வருவதற்கு குறைந்தது ஒருவருடம் ஆகிவிடலாம் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பண்ட் ஐபிஎல் தொடருக்கு வரும்படி டெல்லி கப்பிடல்ஸ் அணி பயிற்சியாளர் ரிக்கி பொன்ரிங் அழைத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது.

ரிஷப் பண்ட் விளையாடுவதற்கு உடற்தகுதியுடன் இல்லை என்றாலும் அவர் எங்கள் அணிக்கு தேவை.

ஒரு கப்டனாக அவரின் செயற்பாடுகள், சிரிப்புகள், அணியை மகிழ்ச்சியாய் வைத்துக்கொள்வது போன்றவை கண்டிப்பாக டெல்லி அணிக்கு தேவை.

எனவே ரிஷப் பண்ட் பயணம் மேற்கொள்ளும் அளவிற்கு தயாராகிவிட்டால் போதும். ஐபிஎல் போட்டிகளின்போது டக் அவுட்டில் எனக்கு அருகில் அமர்ந்திருக்க வேண்டும். மார்ச் மாதத்தின் மத்தியில் டெல்லி கப்பிடல்ஸ் முகாம் தொடங்கப்படும். அப்போது இருந்து அனைத்து நாட்களிலும் ரிஷப் பண்ட் என்னுடன் பயணம் செய்ய விரும்புகிறேன் என அவர் உருக்கமாக தெரிவித்துள்ளார். (க)

# ஐ.சி.சி தரவரிசை இந்தியா முன்னேற்றம்



இந்தியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் ராய்ப்பூரில் நடைபெற்றது. இதில் முதலில் பட்டிங் செய்த நியூசிலாந்து அணி, இந்திய அணியின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 108 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதையடுத்து 109 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் ஆடிய இந்தியா 20.1 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 111 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தப் போட்டி முடிவடைந்ததும் ஒருநாள் அணிகளுக்கான கிரிக்கெட் தரவரிசையை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது. இந்த தரவரிசையின்படி இங்கிலாந்து, நியூசிலாந்து, இந்தியா அணிகள் 113 புள்ளிகளுடன் முதல் 3 இடங்களில் உள்ளன.

4 ஆவது இடத்தில் அவுஸ்திரேலியா (112 புள்ளிகள்), 5 ஆவது இடத்தில் பாகிஸ்தான் (106 புள்ளிகள்) அணிகள் உள்ளன.

6 முதல் 10 இடங்களில் தென்னாபிரிக்கா (100 புள்ளிகள்), பங்களாதேஷ் (95 புள்ளிகள்), இலங்கை (88 புள்ளிகள்), ஆப்கானிஸ்தான் (71 புள்ளிகள்), மேற்கிந்தியத்தீவுகள் (71 புள்ளிகள்) ஆகிய அணிகள் உள்ளன.

இந்தப் போட்டிக்கு முன்னர் நியூசிலாந்து 115 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இங்கிலாந்து 113 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியா 112 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் இந்தியா 111 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஒலிம்பிக்கில் கிரிக்கெட் ஐ.சி.சி பரிந்துரை

எதிர்வரும் 2028 ஆம் ஆண்டு லொஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க ஐ.சி.சி முயற்சித்து வருகிறது.

அந்த ஒலிம்பிக்கில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தலா 6 அணிகள் பங்கேற்கும் இருபது-20 வடிவிலான கிரிக்கெட் போட்டியை சேர்ப்பதற்கு ஒலிம்பிக் போட்டியின் அமைப்பு குழுவிடம் ஐ.சி.சி பரிந்துரை செய்துள்ளது.

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெறுமா என்பது குறித்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மும்பையில் நடக்கும் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என தெரிய வருகிறது.(க)


## மரண அறிவித்தல்

## கந்தையா இராசரத்தினம்

தோற்றம் 10.05.1940 | மறைவு 23.01.2023



அல்வாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (23.01.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சரஸ்வதி, ஆனந்தவடிவேல் ராஜலட்சுமி, வடிவேலு மற்றும் நாகம்மா கணபதிப்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்றவர்களான சாமிவேல், கற்பகநாதன் பாக்கியம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, கணேசபிள்ளை, சச்சிதானந்தம், மற்றும் விசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (24.01.2023) செவ்வாய்க்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விமான நிலைய வீதி,
காளிகோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்: தவமணி (மனைவி)
076 172 5531, 077 651 9277

(C-5837)


# மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை தொலைபேசி/ தொலைநகல்/ வைபர் மற்றும் வாட்ஸ்அப் மூலமாகவும் மின்னஞ்சல் மற்றும் முகநூல் மூலமாகவும் தெரிவிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இராஜகிரிய தேர்தல் செயலகத்தின் இரண்டாவது மாடியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்துடன் தொடர்பு கொள்ள 011 286 0056, 011 286 0059, 011 286 0069 ஆகிய தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்த முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதோடு பெக்ஸ் இலக்கங்கள் 011 286 0057, 011 286 0062, வைபர்/ வாட்ஸ் அப் 071 916 0000 போன்ற இலக்கங்கள் ஊடாகவும் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம். (ம-7)

# தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை நேற்றுடன் நிறைவடைந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைவாக இந்தத் தேர்தலில் தபால்மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைந்தது.

29 மாநகர சபைகள், 36 நகர சபைகள் உட்பட 275 பிரதேச சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக தேர்தல் நடைபெறவுள்ளது.

வேட்புமனுக்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை கடந்த 21 ஆம் திகதி நண்பகலுடன் நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டு புதிய பாடசாலை தவணைக்காக மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்களை வழங்குவது தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

45% பாடப்புத்தகங்கள் அரச அச்சகங்களிலும் 55% பாடப்புத்தகங்கள் தனியார் அச்சக நிறுவனங்களாலும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடநூல்கள் அச்சிடும் பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியக் கடன் உதவியின் அடிப்படையில் பெறப்பட்ட தாள்களின் முதல் தொகுதியை அரச அச்சு சட்டப்பூர்வ கூட்டுத்தாபனம் பெற்றுள்ளதாகவும் பாடநூல் அச்சிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, 2023 ஆம் கல்வியாண்டுக்கான புதிய பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகங்களை வழங்குவது தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், 45% பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கும் 55% தனியார் அச்சக நிறுவனங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. (நி)

# சிறுவர்களிடையே பரவும் தொழுநோய்

## தேசிய தொழுநோய் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

15 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே தொழுநோய் பரவி வருவதாக தேசிய தொழுநோய் ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் பதிவாகிய தொழுநோயாளர்களில் 10 வீதமானோர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என விசேட மருத்துவ நிபுணர் இந்திக்கா கரவிட்ட தெரிவித்தார். (நி)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2023 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மயிலங்காட்டு பொதுச்சந்தை உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இப் பொதுச்சந்தை 2023.02.16 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 24.01.2023 - 06.02.2023 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 07.02.2023 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 07.02.2023 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| . | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | மயிலங்காட்டு சந்தை | 750.00 | 7500.00 | 625,000.00 | |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2023.01.24 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

**க.தர்ஷன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(C-5834)


# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் விரைவில்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வெளியிட தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார். (நி)

# சிறுபோக நெற்செய்கைக்கு இலவச உர விநியோகம்

(கொழும்பு)

நெற்பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற உரத்தை எதிர்வரும் சிறுபோக பயிர்செய்கைக்கு அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தின்போது நெற்செய்கையாளர்களுக்கு உரம் விநியோகிக்கப்படவிருந்த போதிலும், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான யுத்தத்தால், அந்நாடு உரம் ஏற்றுமதி இடைநிறுத்தியிருந்தது. அதனால் எமக்கு அதனை இறக்குமதி செய்ய முடியவில்லை.

தற்போது 36,000 மெற்றிக் தொன் உரம் அடங்கிய கப்பல் ஒன்று அடுத்த மாதம் முதல் இரண்டு வாரங்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுபோகத்திற்கு தேவையான உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இம்முறை 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான அனைத்து உரங்களையும் விநியோகிக்க விவசாய அமைச்சு தயாராக உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அதிகரிக்கும் யாசகர்களால் சுற்றுலாப் பயணிகள் சிரமம்

(கொழும்பு)

ஹிக்கடுவ மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விடுமுறையை கழிக்க வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு யாசகர்கள் மிகப்பெரிய தொல்லையாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. யாசகர்களினால் ஏற்படும் தொல்லைகளால் இலங்கைக்கு மீண்டும் வருவதற்கு அவர்கள் விரும்புவதில்லை என சுற்றுலா வழிகாட்டிகள் தெரிவிக்கின்றனர்.

குழந்தைகளுடன் பெண்கள் மற்றும் ஊனமுற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்கள் பணம் மற்றும் பிற உதவிகளை யாசகமாக கோருவது பெரும் தொல்லையாக உள்ளது என்று சுற்றுலாப்பயணிகள் கூறுகிறார்கள்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வரும் தருணத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இது குறித்து கவனம் செலுத்தி இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# இராசிபலன்

**24.01.2023**
**தை 10, செவ்வாய்க்கிழமை**
**திருதியை முன்னிரவு 8.48 மணிவரை**

**சதயம் பின்னிரவு 3.26 மணிவரை**
**சுபநேரம்- 11.06-12.36 மணிவரை**
**இராகுகாலம் -3.36-5.06 மணிவரை**

**வளவன்**

**மேஷம்** – வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**கடகம்** – கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** – கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், நிதி நிலை உயர வழிவகை செய்வீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்** – அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொதுவாழ் வில் புகழ் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**ரிஷபம்** – சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**விருச்சிகம்** – சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** – சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்க நேரிடலாம்.

**மிதுனம்** – பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கன்னி** – செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மறைமுகப் போட்டிகள் மாறும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** – வியாபார விரோதம் விலகும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மீனம்** – எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல-விதமாக நடைபெறலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**எங்கே உண்மை இருக்கிறதோ அங்கே [illegible] இருப்பதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடையும் அபாயத்தில் பனை ஓலை உற்பத்திப் பொருட்கள்

## உற்பத்தியாளர்கள் கவலை



(அராலி)

தற்காலத்தில் பனையின் ஓலையில் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியானது அருகி வருகிறது. பாரம்பரிய இந்த உற்பத்தியானது அழிவடையும் அபாயத்தில் உள்ளது. இலங்கையில் இந்த உற்பத்திகளை விரும்புபவர்களது எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இந்த உற்பத்திகளை மிகவும் விரும்புகின்றனர் என உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கின்றது. ஏனெனில் கொரோனா பேரிடருக்கு பின்னர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகக் காணப்படுகிறதால் எமது உற்பத்திகளை விற்பனை செய்வது கடினமாக உள்ளது.

ஆகையால் வாழ்க்கைச் செலவை ஈடு செய்வது மிகவும் கடினமாக உள்ளது. இத்தொழிலை பயிற்சி எடுத்த பலரும் எமது ஊரில் உள்ளார்கள். இந்த உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத காரணத்தினால் மேற்கொண்டு பயிற்சிகளை பெறுவதற்கோ அல்லது இந்தத் தொழிலை செய்வதற்கோ யாரும் முன்வருவதில்லை.

இந்தத் தொழில் அற்றுப் போகும் அபாயம் காணப்படுகிறது. இதன்மூலம் போதிய வருமானம் இன்மை காரணமாக பெரும்பாலானோர் இதில் ஆர்வம் காட்டுவதில்லை.

எனவே அரசாங்கம் மிகுந்த அக்கறை எடுத்து எமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். (4-6-104)

# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீரிழிவுக் கழகமும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 முதல் ஒரு மணிவரை திருநெல்வேலி சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ளது.


இதன்போது நீரிழிவு, இரத்த அமுத்த பரிசோதனை, உடல் திணிவு சுட்டி (BM1), கண் பரிசோதனை ஆகிய பரிசோதனைகள் இடம்பெறும். (4-6)



யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளும் வெற்றி பெற்ற இல்லங்களுக்கான பரிசில் வழங்கலும் கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

# இந்தியாவை பிரதிபலித்து வல்வெட்டித்துறையில் பட்டங்கள்





(யாழ்ப்பாணம்)

இந்தியாவை பிரதிபலித்து யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாச கடற்கரையில் பல்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் பட்டங்கள் பறக்கவிடப்பட்டன.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம் மற்றும் 74 ஆவது குடியரசு தினம் ஆகியவற்றை முன்னிட்டு ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் என்ற கருப்பொருளின் கீழ், இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்தியக் கொடியின் நிறங்களைக்கொண்ட அழகான பட்டங்கள் திறந்த வெளியில் பறக்க விடப்பட்டன.

இதன்போது யாழ்ப் பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர். (4-6-33)

# உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன்புலோ பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை முன்னாள் போராளி ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உறவு முறையிலான நபர் ஒருவர் தன்னை அழைத்து தாக்குதல் மேற்கொண்டிருப்பதாக குறித்த முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். தாக்குதலுக்கு இலக்கான நபர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# கஞ்சாவுடன் கைதானவர் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி சிவபுரம் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவபுரம் பகுதியில் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

மேற்படி சந்தேக நபரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதைவிட ஏற்கனவே 5 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

# 500 போதை மாத்திரைகளுடன் வடமராட்சியில் ஒருவர் கைது



(கரணவாய்)

வடமராட்சியில் மாணவர்களை குறிவைத்து போதை மாத்திரைகளை விநியோகித்து வந்த இளைஞர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுடன் அவரிடமிருந்து 500 போதை மாத்திரைகள் கைப்பெற்றப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். நெல்லியடி அரச புலனாய்வாளர்களின் தகவலிற்கு அமைய நெல்லியடி [illegible] நிலைய குற்றத்தடு[illegible] பொறுப்பதிகாரி உ. பொலிஸ் பரிசோதகர் ரத்நாயக்கா தலைமையில் pregasafe எனப்படும் 500 போதை மாத்திரைகளுடன் வல்லை பிரதேசத்தில் வைத்து 28 வயதுடைய சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து ஒரு மாத்திரை 250 ரூபாய் வீதம் விற்பனை செய்வதாக அரச புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவலின்படி மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். நெல்லியடி பொலிஸார் அவரை பருத்தித்துறை நீதிமன்றில் [illegible]



இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் மறைந்த பாராளுமன்ற உறுப்பினருமான வி.தர்மலிங்கத்தின் திருவுருவச்சிலை நேற்று சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது.

(படம்:-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஞ்சம் வழங்கும் வேட்பாளர்களிடம் மக்கள் ஏமாறக் கூடாது- பவ்ரல்

(கொழும்பு)

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இலஞ்சம் வழங்கும் வேட்பாளர்களிடமிருந்து மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.

தேர்தல் நடவடிக்கைக்காக அரச அதிகாரம் மற்றும் வளங்கள் பயன்படுத்தப்படுவதை தடுப்பது அரச அதிகாரிகள் பொறுப்பாகும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கிடைக்கப்பெறும் தேர்தல் சட்ட மீறல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தல் எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் சிலர் தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச அதிகாரம் மற்றும் அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்தி வருவதாக பல முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நடவடிக்கைகளை தடுப்பதற்காக அரச அதிகாரிகள், குறிப்பாக உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், நகர ஆணையாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருப்பதால் மக்கள் பொருளாதார கஷ்டத்தில் இருக்கின்றனர். அதனால் உணவுப் பொதிகள், வேறு உதவிகள் அல்லது 5 ஆயிரம் ரூபா பணம் போன்ற விடயங்களுக்காக மக்கள் தங்களதும் தங்கள் பிள்ளைகளினதும் எதிர்காலத்தை அழித்துக் கொள்ளக்கூடாது.

இதுதொடர்பாக மக்கள் மிகவும் சிந்தித்து செயற்பட வேண்டும். ஏனெனில், வேட்பாளர்கள் இன்று வழங்கும் 5 ஆயிரம் ரூபாவுக்கு பதிலாக தேர்தலுக்கு பின்னர் 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகம் பெற்றுக்கொள்ள முடியும்.

பணம், உதவிகளை வழங்கும் வேட்பாளர்கள் மக்களின் உண்மையான வேட்பாளர்களாகப் போவதில்லை. அதனால் அவதானமாக இருக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (ஙி)


ஆவது
60
பிறந்த நாள் வாழ்த்துக்கள்




**வைத்திய கலாநிதி அ. இரவீந்திரன்**

ஆனந்தமாக வாழ ஆண்டவன் வாழ்த்தட்டும்!
புன்னகையோடு வாழ பூக்கள் வாழ்த்தட்டும்!
மகிழ்ச்சியோடு வாழ மனதார வாழ்த்துகின்றோம்
இன்று போல் என்றும்
சந்தோஷமாக வாழ... வாழ்த்துகின்றோம்
பல்லாண்டு காலம் வாழ்க
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

[14367]

வாழ்த்துவோர்-
அக்கா, அத்தான், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உரும்பிராய்.



## பதவி வெற்றிடம்

❖ வெப் இயந்திர இயக்குநர்கள்
பயிலுநர்கள் (இரவுக்கடமை-ஆண்கள்)

யாழ்.நகரிலிருந்து 5 km தூரத்துக்குள்
இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு
**076 097 3121**



## பதவி வெற்றிடம்

❖ அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்)
❖ முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)

உங்கள் சுயவிபரக் கோவையை
**076 636 3378**
என்ற Whats App இலக்கத்துக்கு அனுப்புங்கள்.

அல்லது

பொதுமுகாமையாளர், வலம்புரிப் பத்திரிகை பணிமனை,
இல 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
என்ற முகவரிக்கு தபாலில் அனுப்புங்கள்.



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா:54 சூரி 6 செவ் 1 இல்
உயரம்: 176 cm
தகைமை/ தொழில்: Bsc in IT software Engineer
எதிர்பார்ப்பு: படித்த பெண் உத்தியோகம் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்
தொ.இ: B/13280

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா:49 சூரி.செவ் 1 இல்
உயரம் :5'9"
தகைமை/தொழில்: Bsc(முகாமையாளர் தனியார்)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: B/13281

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: சூரி 4செவ் 3 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்:Diploma Sales Assistant
எதிர்பார்ப்பு: படித்தபெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/13282

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 16 சூரி 3 செவ் 7 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்:A/L வியாபாரம் லண்டன்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் யாழ்ப்பாண பெண் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்
தொ.இ: B/13283

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா:32 சூரி .செவ் 12 இல்
உயரம்:162 cm
தகைமை/தொழில்: BA பட்டதாரி DO
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/11824

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா:57 சூரி 12 செவ் 7 இல்
உயரம்:5'2"
தகைமை/ தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: G/11831

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 16½ சூரி 9 செவ் 12 இல்
உயரம்:5'2"
தகைமை/ தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/11838

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 28 சூரி 3 செவ் 1 இல்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: Bscஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11843

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 84





காலாள் வீரர்களின் வாள்களோடு வாள்களும் வேல்களோடு வேல்களும் உராய்ந்த போது எழுந்த ஜங்கார ஒலிகளினால் திக்குத் திகாந்தங்கள் எல்லாம் நடுநடுங்கின. மூன்று நாள் இடைவிடாமல் சண்டை நடந்த பிறகு, ரணகளம் முழுவதும் ரத்தக் கடலாகக் காட்சியளித்தது. அந்தக் கடலில் செத்த யானைகளும் குதிரைகளும் திட்டுத் திட்டாகக் கிடந்தன.

உடைந்த ரதங்களின் பகுதிகள் கடலில் கவிழ்ந்த கப்பலின் பலகைகளைப் போல் மிதந்தன. இரு தரப்பிலும் ஆயிரம் பதினாயிரம் வீரர்கள் உயிரிழந்து கிடந்தார்கள்.

மூன்று நாள் இவ்விதம் கோர யுத்தம் நடந்த பிறகு பல்லவர் சைன்யத்தில் ஒரு பகுதிதான் மிஞ்சியிருந்தது. மிஞ்சியவர்களும் மிகக் களைத்திருந்தார்கள். பாண்டிய நாட்டு வீர மறவர்களோ, களைப்பையே அறியாத வரம் வாங்கி வந்தவர்களைப் போல், மேலும் மேலும் வந்து தாக்கினார்கள்.

அபராஜிதவர்மனுடைய கூடாரத்தில் மந்திராலோசனை நடந்தது. அபராஜிதன், பிரதிவீபதி, ஆதித்தன் ஆகிய மூன்று மன்னர்களுடன் படைத்தலைவர்களும் கலந்து ஆலோசித்தார்கள். இனி எதிர்த்து நிற்க முடியாது என்றும், பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடகரைக்குச் சென்று விடுவதே உசிதம் என்றும் முடிவு செய்தார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் போர்க்களத்தில் ஓர் அதிசயம் நடந்தது. முதுமையினால் தளர்ந்தவனும் உடம்பில் தொண்ணூற்று காயவடுக்கள் உள்ளவனும் கால்களில் பட்ட கொடிய காயத்தினால் எழுந்து நிற்கும் சக்தியை இழந்தவனுமான விஜயாலய சோழன் எப்படியோ யுத்த அரங்கத்துக்கு வந்து விட்டான்.

பல்லவ சைன்யம் பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடக்கே போய் விட்டால், சோழ நாடு மறுபடியும் நெடுங்காலம் தலையெடுக்க முடியாது என்பதை உணர்ந்திருந்த அந்தக் கிழச் சிங்கத்தின் கர்ஜனை, பல்லவர் கட்சியில் எஞ்சியிருந்த வீரர்களுக்குப் புத்துயிர் அளித்தது.

"ஒரு யானை! எனக்கு ஒரு யானை கொடுங்கள்!" என்றான்.

"நமது யானைப் படை முழுதும் அதமாகி விட்டது; ஒன்றுகூடத் தப்பவில்லை" என்றார்கள்.

"ஒரு குதிரை, ஒரு குதிரையாவது கொண்டு வாருங்கள்!" என்றான்.

"உயிருள்ள குதிரை ஒன்றுகூட மிஞ்சவில்லை" என்று சொன்னார்கள்.

"சோழ நாட்டுச் சுத்த வீரர்கள் இருவரேனும் மிஞ்சி உயிரோடு இருக்கிறார்களா? இருந்தால் வாருங்கள்!" என்று விஜயாலயன் அலறினான்.

இருவருக்கு பதிலாக இருநூறு பேர் முன்னால் வந்தார்கள்.

"இரண்டு பேர் தோளில் வலியும் நெஞ்சில் உரமும் உள்ள இரண்டு பேர் என்னைத் தோள் கொடுத்துத் தூக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்கள் இரண்டு இரண்டு பேராகப் பின்னால் வந்து கொண்டிருங்கள். என்னைச் சுமக்கும் இருவர் விழுந்தால், பின்னால் வரும் இருவர் என்னைத் தூக்கி கொள்ளுங்கள்!" என்றான் அந்த வீராதி வீரன். அப்படியே இரண்டு பீமசேனர்கள் முன்னால் வந்து விஜயாலயனைத் தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

"போங்கள்! போர் முனைக்குப் போங்கள்!" என்று கர்ஜித்தான்.

போர்க்களத்தில் ஓரிடத்தில் இன்னமும் சண்டை நடந்து கொண்டி-ருந்தது. தெற்கத்தி மறவர்கள் கீழைநாட்டாரைத் தாக்கிப் பின்வாங்கச் செய்து கொண்டே வந்தார்கள். இருவருடைய தோள்களில் அமர்ந்த விஜயாலயன் அந்தப் போர் முனைக்குப் போனான்.

இரண்டு கைகளிலும் இரண்டு நீண்ட வாள்களை வைத்துக் கொண்டு திருமாலின் சக்ராயுதத்தைப் போல் கழற்றிக் கொண்டு எதிரிகளிடையே புகுந்தான்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### குதிரைக்குத் தூண்டில்

(நேற்றைய தொடர்ச்சி)

வெயிலுக்கு முன்னே புறப்பட்டால் பிரயாணக் களைப்பு இல்லாமல் இருக்கும் என்று அவர்கள் மறுநாள் அதிகாலையிலேயே அங்கிருந்து கிளம்பினார்கள்.

இருந்தாலும் தள்ளாத குருவோடு அவர்கள் தளர் நடைதான் போட முடிந்தது. எனவே கொஞ்சத் தூரம் போனதுமே வெயில் கொளுத்த ஆரம்பித்து விட்டது.

வழியிலே ஒரு சோலை தெரிந்தது. அங்கே பச்சைப் பசேலெனப் பல மரங்கள் தெரிந்தன. உள்ளே போனால் குளுகுளு என்றிருக்கும் போலிருந்தது. அங்கே சென்று சற்று நேரம் இளைப்பாறினார்கள்.

அந்நேரத்தில் மிலேச்சனுக்கு வயிறு என்னவோ செய்தது. பக்கத்திலேயே ஓர் ஏரி தெரிந்தது. அதனுள் நீரும் தெரிந்தது. கரையோரமாகப் போய் ஒதுங்கினான். கால் கழுவ ஏரியில் இறங்கினான்.

அந்த ஏரியின் கரையில் ஓர் ஐயனார் கோயில் இருந்தது. அந்தக் கோயிலின் எதிரே ஒரு குதிரை நின்று கொண்டியருந்தது. அது மண் குதிரை. பூஜை செய்து அந்தக் குதிரையைக் கொண்டு வந்து காணிக்கையாக்கி அங்கே நிறுத்தியிருக்கிறார்கள்.

அது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. பெரியதாக இருந்தது. புதியதாக இருந்தது. பல வண்ணங்கள் தீட்டப்பட்டு நேர்த்தியாக இருந்தது. கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

அது ஏரிக்கரையில் இருந்ததனால் அதன் விம்பம் தண்ணீரில் தெரிந்தது. கால் கழுவச் சென்ற மிலேச்சன் ஏரி நீரில் குதிரையைக் கண்டு அதிசயத்துப் போனான். நிமிர்ந்து கரையை நோக்கினான். அங்கே மண் குதிரை இருப்பதைக் கண்டான். ஏரி நீர் கண்ணாடி போல் தெளிவாக இருப்பதனால் அதன் உருவம் தான் நீரில் தெரிகிறது என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தான். ஆனால் அப்போது வீசிய காற்றில் நீர் அசைந்தது. நீருக்குள் இருந்த குதிரையும் அசைந்தது. ஆனால் கரையிலேயிருந்த குதிரை அசையவே இல்லையே!

அதன் பிம்பமாயிருந்தால் அது அசையாமல் நீரில் உள்ள இது அசையாதே! நீருக்குள் இருக்கிற குதிரை அசைகிறது என்றால் அது உயிருள்ள குதிரையாகத் தான் இருக்க வேண்டும். ஏரிக்கரையில் கோயிலுக்கு எதிரே இருப்பது உயிரில்லாத மண் குதிரையே. தண்ணிருக்குள் இருப்பது உயிருள்ள குதிரையாய் இருந்தால் கல்லை எடுத்து வீசினால் ஓடும் இல்லையா? என்று எண்ணி ஒரு கல்லை எடுத்து கூச்சல் போட்டு ஏரி நீரில் தெரியும் குதிரையை நோக்கி வீசினான்.

கல் விழுந்ததும் தண்ணீர் அசைந்தது. தண்ணீரில் தெரிந்த குதிரையும் அசைந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன்தான். – டாக்டர் ஜான்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# சமயத் தலைவர்களில் இருந்து அதர்மம் ஆரம்பிக்கப்படுகிறது

ஓர் ஊரில் அதர்மம் தலைவிரித்தாடியது.

இது கண்டு பொறுக்க முடியாத கடவுள் தூதுவர்களை அழைத்து, அந்த ஊரில் உள்ள அனைவரையும் அழித்துவிடுமாறு உத்தரவிடுகின்றார்.

கடவுளின் கட்டளைப்படி அந்த ஊரில் உள்ளவர்களை அழிப்பதற்குத் தூதுவர்கள் வருகின்றனர்.

அந்த ஊரின் நுழைவாயிலில் ஒரு வழிபாட்டுத்தலம்.

அங்கு இருந்த ஒரு பெரியவர் இறைவனைச் சதா தொழுதபடியே இருந்தார்.

இதனைக் கண்ணுற்ற தூதர்கள் திகைத்துப் போயினர்.

அனுதினமும் கடவுளைத் தொழுதேத்தும் அப்பெரியவரை எங்ஙனம் கொல்வது என்று மனக்குழப்பமடைந்த தூதர்கள், வந்தவேகத்தில் கடவுளிடம் திரும்பிச் சென்றனர்.

அந்த ஊரில் தங்களையே வழிபட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெரியவர் இருக்கிறார். அவரையும் கொல்வதா? என்று கடவுளிடம் வினவினர்.

அதற்கு கடவுள் அவரைத்தான் முதலில் கொல்லுங்கள் என்றார்.

தூதர்கள் அதிர்ந்து போயினர். ஏன்? சுவாமி என்று கேட்க, தர்மம் நீங்கி அதர்மத்தின் வழியில் மக்கள் செல்லும்போது, நன்னெறி அறிந்த பெரியவர்கள் – சமயக் குருமார்கள் மக்களுக்கு அறத்தை, அன்பை, நீதியை, பாவ புண்ணியத்தை எடுத்துரைத்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

ஆனால் அவர் அதைச் செய்யாமல், என்னை வழிபடுவதால் மட்டும் என்ன பயன்?

ஆகையால் அறத்தை எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்தத் தவறிய அந்தப் பெரியவரைத்தான் முதலில் கொல்லுங்கள் என்றார் கடவுள்.

உண்மை. நம் மண்ணில் அதர்மம் என்பது சமயத் தலைவர்கள், சமயக் குருமார்களில் இருந்துதான் ஆரம்பமாகின்றது.

தென்பகுதியில் பௌத்த பிக்குகளின் இன – மத வெறி மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தியமை தெரிந்ததே.

இதேபோல எங்கள் தமிழ் மண்ணிலும் இப்போது சமயத் தலைவர்கள் அறம் பிழைத்து நிற்கின்றனர்.

ஆம் களவு, கொள்ளை, கொலை, போதைவஸ்து பாவனை என்று நம் மக்கள் அந்தரித்து நிற்கும்போது, அதனின்றும் நம் சமூகத்தை மீட்பதில் சமயத் தலைவர்கள் – சமயக் குருமார்கள் எந்தக் கருசனையும் காட்டவில்லை.

மாறாக, தன்னம்பிக்கையை இழந்து வாழத் தெரியாமல் தம்மையே அழிக்க முற்படுகின்ற இளம் சமூகத்தை ஆற்றுப்படுத்தவில்லை.

ஆனால் உயர் பதவிகளில் ஆட்களை நியமிப்பது, மறைமுக அரசியல் நடத்துவது, அரசாங்கத்துடன் நெருக்கமான உறவுகளை வைத்து தமது தேவைகளை நிறைவேற்றுவது, பழிதீர்ப்பது என்பதை மட்டுமே இவர்கள் செய்கின்றனர்.

இறைவனை மனதிருத்தி மனிதத்தை தெய்வீகமாக்குகின்ற தூய பணியே எம் பணி என்று அடையாளப்படுத்துகின்ற நம் சமயத் தலைவர்களும் சமயக் குருமாரும் செய்கின்ற இந்த அதர்மம் என்றோ ஒருநாள் இந்த மண்ணில் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஆகையால் இதை உணர்ந்தேனும் பாவ காரியத்தைச் செய்வதினின்றும் உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்.

# கோண்டாவிலில் திறக்கப்பட்ட அசைவ உணவகத்தை மூட

## நல்லூர் பிரதேசசபை உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பன்னாட்டு உணவு விற்பனை நிறுவனம் ஒன்றின் கிளையை தற்காலிகமாக மூடுமாறு நல்லூர் பிரதேசசபை பணித்துள்ளது.

குறித்த் அசைவ உணவகத்திற்கு முன்பாக சைவ ஆலயங்கள் காணப்படுகின்றன. இதனால் குறித்த ஆலய நிர்வாகம் மற்றும் சைவ அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துவந்தன.

அதேபோல் குறித்த வியாபார நிலையம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு அமைவுச் சான்றிதழ் மற்றும் வியாபார அனுமதி பத்திரம் ஆகியன பெறப்படவில்லை.

இந்த விடயம் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கமைய குறித்த உணவு விற்பனை நிலையத்தை தற்காலிகமாக மூடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, நல்லூர் பிரதேசசபை அறிவித்துள்ளது. (ம-7)

# யாழில் வேட்பாளர் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் குத்துச்சண்டை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சி - மறவன் புலவு பிரதேசத்தில் வைத்து குறித்த வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. தாக்குதல் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மரண தண்டனை கைதியும் பரீட்சைக்கு தோற்றுகின்றார்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதி ஒருவர் நேற்று ஆரம்பமான 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் ஆயுள் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து மேலும் நான்கு கைதிகளும் 2022/23 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கைதிகள் வெலிக்கடையில் உள்ள மகசீன் சிறைச்சாலை பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றுவார்கள்.

இதேவேளை, யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரும் 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியவில்லை

## விவசாயிகள் கவலை

பெரும் போக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அறுவடை செய்தநெல்லை உரிய விலை கிடைக்கப் பெறாத காரணத்தினால் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இடைத்தரகர்கள் குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்ய முன்வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் நெல்லை உரிய நேரத்தில் கொள்வனவு செய்வதில்லை. வடமாகாணத்தில் அறுவடை முடிந்த பின்னரே நெல்லுக்கு விலை தீர்மானிக்கப்படுவதும் நெல் கொள்வனவு செய்யப்படுவதும் வழமையாக வுள்ளது.

வட மாகாண விவசாயிகளுக்கும் பாரபட்சமின்றி உரிய நேரத்தில் நெல்லுக்கான விலையினை அறிவிக்கப்பட வேண்டும். அத்துடன் அதனை அமுல்படுத்தவும் வேண்டும் என மேலும் தெரிவித்தனர். (4-6,316)

# டிசம்பர் மாதத்திற்கான பணவீக்கம் குறைவடைந்தது

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதத்தில் பணவீக்கம் குறைவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான, டிசம்பர் மாதம் முதன்மை பணவீக்கம், 59.2 சதவீதமாக பதிவாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் 65 சதவீதமாக பதிவான முதன்மை பணவீக்கம், டிசம்பர் மாதம் இவ்வாறு வீழ்ச்சிடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், உணவு பணவீக்கம் 69.8 சதவீதத்திலிருந்து, 59.3 சதவீதமாகவும், உணவல்லா பணவீக்கம் 60.4 சதவீதத்திலிருந்து, 59 சதவீதமாகவும் குறைவடைந்துள்ளது.

போக்குவரத்து பணவீக்கமானது, 104.4 சதவீதமாக கடந்த நவம்பரில் காணப்பட்ட நிலையில், டிசம்பர் மாதத்தில் 103.2 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

# பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை

தனது முன்னாள் காதலியின் புகைப்படங்களை நண்பர்களுடன் பகிர்ந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு, படங்கள் அழிக்கப்பட்ட அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகள் வீதியில் செல்லும் போது சில இளைஞர்கள் பாலியல் சேட்டையில் ஈடுபடுவதாக சில மாதங்களின் முன்னர் புகார் எழுந்திருந்தது.

வீதியோரம் நிற்கும் சில இளைஞர்கள் சிலர் மர்ம உறுப்புக்களை காண்பிப்பதாகவும், இதனால் மாலை வேளைகளில் மாணவிகள் வெளியில் நடமாட அச்சமடைந்துள்ளதாகவும் முறையிடப்பட்டிருந்தது.

இதை தொடர்ந்து, பொலிஸார் பல்கலைக்கழக சுற்றுவட்டாரத்தில் கண்காணிப்பு, ரோந்தை தீவிரப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பல்கலைக்கழக சுற்றுவட்டாரத்தில் ரோந்து சென்ற பொலிஸார், பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு முன்பாக நின்ற இரண்டு மாணவர்கள் மீது சந்தேகமடைந்து, அவர்களை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களின் கையடக்க தொலைபேசிகளை பரிசோதித்த போது, ஒருவர் முன்னாள் காதலியின் அந்தரங்க புகைப்படங்களை நண்பர்களுடன் பகிர்ந்திருந்தது கண்டறியப்பட்டது.

இணைய வழி உரையாடலின் போது காதலியின் அந்தரங்க காட்சிகளை பதிவு செய்து வைத்திருந்ததுடன், காதல் முறிவடைந்ததும் அந்த புகைப்படங்களை நண்பர்களுடன் பகிர்ந்துள்ளதும் தெரியவந்தது.

இதையடுத்து, எச்சரிக்கப்பட்டு, அந்தரங்க காட்சிகள் அனைத்தும் அழிக்கப்பட்டன.

இரண்டு மாணவர்களும் எச்சரிக்கப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-7)

# பேருந்து-மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து

## ஒருவர் படுகாயம்

வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி சந்தியில் நேற்று முன்தினம் பேருந்தும் மோ.சைக்கிளும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயம் அடைந்த நிலையில் அவ்விடத்தில் நின்ற மக்களால் வாகனம் ஒன்றின் மூலம் மருதங்கேணி மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணையினை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6,64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. விவசாய பண்ணையில் பெரும்போக அறுவடை விழா



(கண்டாவளை)

வவுனியா கனகராயன் குளத்தில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவசாய பண்ணையில் பெரும் போக அறுவடை விழா நேற்று நடைபெற்றது.

வவுனியா கனகராயன் குளத்தில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த விவசாய பண்ணையில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக செய்கையின் அறுவடை விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

பல்கலைகழக விவசாய பீட பீடாதிபதி சீ.வசந்தரூபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் விவசாய பீட திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-6-315-316)

## முள்ளம்பன்றியை வேட்டையாடிய ஒன்பது பேர் கைது



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செம்பியன்பற்று பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்ட சமயம் அப் பகுதியில் முள்ளம் பன்றி ஒன்றை வேட்டையாடிய குற்ற ச்சாட்டில் ஒன்பது சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து வேட்டையாடப்பட்ட முள்ளம்பன்றி, வெடி மருந்துகள், துப்பாக்கிரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

ஒன்பது சந்தேக நபர்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (4-6-316)



கிளிநொச்சி அக்கராயனில் மாபெரும் மாட்டு வண்டி சவாரி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. அக்கராயன் சவாரித் திடலில் பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பித்த இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. அக்கராயன்குளம் கிளை சவாரி சங்கத்தினால் இப்போட்டி நடாத்தப்பட்டது.

(படம்- கிருஸ்ணகுமார், தேவானந்தன்)

## பேருந்து சேவை இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று வரக் கூடிய வகையில் பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும் என பெற்றோர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் புதுக்குடியிருப்புக்கும் வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு மாணவர்கள் சென்று கல்வி கற்று வரும் நிலையில் பாடசாலை நேரங்களில் மாணவர்கள் சென்று வரக் கூடிய வகையில் பேருந்து சேவைகள் நடை பெறுவதில்லை எனவும் தூர இடங்களுக்கு பயணிக்கின்ற பேருந்துகள் இக்கிராமத் தின் ஊடாகச் சென்ற போதிலும் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று திரும்பக் கூடிய வகையில் பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (4-6-350)

## அறுவடை நேரத்தில் மழை விவசாயிகள் பாதிப்பு



(அக்கராயன்)

அறுவடை நேரத்தில் மழை பெய்வதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது காலபோக நெல் அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் திடீர் திடீரென மழை வீழ்ச்சி இடம்பெறுவதன் காரணமாக நெல் அறுவடை மேற்கொள்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர்.

மழை இல்லாத நேரத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லினை உலர வைப்பதிலும் சிரமங்கள் கொள்ளப்படுகின்றது.

இதேவேளை அறுவடை செய்யப்பட்ட நெல்லினை விற்பனை செய்வதிலும் விவசாயிகள் நட்டத்தினை எதிர்கொள்வதாகவும் குறைந்த விலையில் தனியாரினால் நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் நெல்லிற்கு நியாயமான விலை பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிராமங்களில் போதியளவு நெல் உலர விடும் தளங்கள் இல்லாத தன் காரணமாக பச்சை நெல் லாக நெல்லினை விற்க வேண் டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். எதிர்காலத்தில் கிராமங்களில் போதியளவு நெல் உலர விடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4-6-350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 250 | 350 |
| தக்காளி | 200 | 180 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 180 | 200 |
| கோவா | 80 | 80 | 100 | 120 |
| கரட் | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 100 | 100 | 120 | 120 |
| புடோல் | 150 | 240 | 180 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 600 | 600 |
| பெரிய வெங்காயம் | 200. | 160 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 200 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 500 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 350 |
| பீற்றூட் | 400 | 300 | 240 | 250 |
| கறிமிளகாய் | 700 | 700 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1400 | 1500 |
| போஞ்சி | 250 | 300 | 200. | 250 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 150 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 500 |
| முள்ளங்கி | 50 | 100 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 100 |
| வல்லாரை | 50 | 20 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | — | 40 | 80 |

## கிளிநொச்சியை சேர்ந்த ஐவர் தமிழகத்தில் தஞ்சம்

(கிளிநொச்சி)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக் கடி காரணமாக கிளிநொச்சியைச் சேர்ந்த ஐந்து பேர் தமிழகத்தில் தஞ்சமடைந் துள்ளனர்.

நாச்சிக்குடா கடற்கரையில் இருந்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை காலை புறப்பட்டு நேற்று திங்கட் கிழமை அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் இராமேஸ்வரம் அடுத்துள்ள சேராங் கோட்டை கடற்கரைக்கு சென்றடைந்துள்ளனர்.

அவர்களை மரைன் பொலிஸார் மண்டபம் பொலிஸ் நிலை யத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங் கையில் இருந்து அகதிகளாக தமிழகம் சென்றவர்களின் எண்ணிக்கை 217 ஆக உயர்வடைந்துள்ளது. (4-60-104)

## மணல் ஏற்றியவருக்கு அபராதம் விதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் அனுமதிப் பத்திரமன்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு 75 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரமன்றி மணல் சென்ற டிப் பர் வாகனத்தையும் அதன் சாரதி யும் கைது செய்த பொலிஸார் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுவின்...

இலங்கையில் 12.5 கிலோ எரிவாயு நிரப்பப்பட்ட கொள்கலன் ஒன்றின் விலை 500 ரூபாயால் அதிகரிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.(ம-7)

# மோ.சைக்கிள்...

தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரணைப்பாலை வீதியில் இரு திசைகளில் இருந்தும் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டு விபத்தினை சந்தித்துள்ளன.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 23 வயதுடைய வள்ளிபுனம் புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த டிலுக்சன் என்ற இளைஞன் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு ஆதார மருந்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7)

# பிள்ளைகளின்...

அரசாங்கத்தின் இயல்பை நாம் புரிந்து கொண்டதன் காரணமாகவே அரசாங்கம் இப்படிப்பட்ட தன்னிச்சையான மற்றும் இரக்கமற்ற முடிவை எடுத்ததில் ஆச்சரியப்படவில்லை என்பதற்கு காரணமாகும்.

தொடர்ந்து மின்சாரத்தை வழங்குவதற்கென்றால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்த போதிலும், அது பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்கான காரணமாக அமையாது என்பதோடு,

இலட்சக்கணக்கான பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான உயர்தரப் பரீட்சையின் போது கூட மின்சாரம் வழங்க முடியாத அரசாங்கம்எந்தளவு மக்கள்விரோத அரசாங்கமாக உள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்ளலாம் என்றார். (ம-7)

# வடக்கில் செய...

அறிவிக்கப்பட்ட நிலையில், இடமாற்றங்கள் வழங்குவது தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக இருக்குமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# உயர்தரப் பரீட்சை...

பயன்படுத்த முடியும் என ஆணையம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் காலப்பகுதியில் நிலவும் மின்வெட்டு அட்டவணை குறித்த அண்மைக் காலச் செய்திகளைக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை வெளியிடும்போதே அது இவ்வாறு தெரிவித்துள்ளது.(ம-7)

# இனப் பிரச்சினை...

தால் கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்த அதே விளைவை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சந்திக்க நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முரசுமோட்டையில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழர்களுக்கான உரிமைகளை தருவதற்கு சிங்களதேசம் எப்போதும் தயாராக இல்லை. தற்போதுள்ள ரணில் அரசு கடந்த காலங்களில் தமிழர்கள் மீதான இன அழிப்புக்களையும் தமிழர் மீதான அடக்குமுறைகளையும் மேற்கொண்டுள்ளது.

இந்த அரசு தமிழர்களுக்கான ஒரு தீர்வை வழங்க முன்வர வேண்டும். மாறாக சர்வதேசத்தையும் ஏமாற்றி தமிழர்களையும் ஏமாற்றி தங்களுடைய ஆட்சிக்காலத்தை தக்க வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு ரணில் அரசு இருந்தால் அது பாரிய விளைவை ஏற்படுத்தும்.

வடக்குக்கிழக்கு மாகாணங்களுக்கு காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் கொடுக்கின்றோம். அதுபற்றி இந்த அரசியல் யாப்பில் திருத்தங்கள் பற்றி யோசிக்கின்றோம். ஜனாதிபதி சம்பந்தன் ஐயாவை அழைத்துப் பேசியதாக செய்திகளில் பார்த்திருக்கின்றோம்

இதெல்லாம் உலக நாடுகளிடமிருந்து பணத்தை பெறுவதற்கான ஒரு நாடகமாகும். இந்த நாடு பட்டினியை நோக்கி செல்கின்றது. இந்த அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழர்களுக்கு ஏதோ தீர்வை கொடுப்பது போல சர்வதேசத்திற்கு காட்டி கொண்டிருக்கின்றது.

இது மிக ஆபத்தானது. ஒற்றை ஆட்சிக்குள் தான் காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவது என்று சொன்னால் அதனை எப்போதும் மீளப்பறிக்கலாம். மீளப் பெற முடியாத சமஷ்டி முறைக்குள் மாகாணத்துக்கு காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் நம்பிக்கைக்குரியதாக இருக்கும்

தமிழர்கள் தங்களை தாங்களே ஆளுகின்ற ஆட்சி உரிமை அவர்களது மரபுவழி தாயகம் எமது மண்ணில் எமது மொழி அடிப்படையில் எங்கள் தேசிய பிரச்சினையை தீர்க்கும் வகையில் அது சமஷ்டி அடிப்படையிலேயே அமைய வேண்டும். அதை தர தவறி வெறும் ஏமாற்றுக்களை இந்த அரசாங்கம் செய்தால் கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்த அதே விளைவை ரணில் விக்கிரமசிங்கவும் சந்திக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7,315)

# யாழில் 80 ஏக்கர்...

ரையாடல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி செயலக அதிகாரிகள், யாழில் எதிர்வரும்2மாதங்களில் இராணுவம் வசமுள்ள 80 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளது. இதற்கு இராணுவத்தினரும் இணங்கியுள்ளனர்.

மேலும் ஏனைய விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7,33,104)

# எவ...

ளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்படுமானால் மக்கள் புரட்சியின் 2 ஆவது அலை உருவாகும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கான வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது எனவும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

# திட்டமிட்டவகை...

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 09ஆம் திகதி நடத்தப்படும். வேட்பு மனுத்தாக்கலின் பின்னர் தேர்தல் பிற்போடப்படும் என நாட்டு மக்கள் அச்சம் கொள்ள வேண்டிய தேவை இல்லை. தேர்தலை பிற்போடுவதற்கான ஏற்றுக்கொள்ள கூடிய காரணிகள் ஏதும் கிடையாது.

தேர்தலை நடத்த நிதி நெருக்கடி உள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு திறைசேரி இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. வரவு செலவு திட்டத்தின் ஊடாக தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் செலவுகளை இயலுமான அளவு மட்டுப்படுத்த விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.கடந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தல்களை காட்டிலும் இந்த தேர்தல் மிக எளிமையான முறையில் நடத்தப்படும் என்றார். (ம-7)

## ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1464
வெற்றி இலக்கங்கள்: கடகம் 1 9 9 4 4 1
தேசிய லொத்தர் சபை

## தன நிதானய
திகதி - 2023.01.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1039
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 30 31 53 69

## கொவிசெத
திகதி 2023.01.23
சீட்டிழுப்பு இலக்கம் 3251
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 12 17 44 48
தேசிய லொத்தர் சபை

## மெகா பவர்
திகதி 23/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1357
வெற்றி எழுத்து: I
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கங்கள்: 19 49 60 79

## HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.23
சீட்டிழுப்பு இலக்கம் 318
வெற்றி இலக்கங்கள்: கும்பம் 04 36 47 53 கும்பம்
தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத
திகதி 2023/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 5009
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 7 0 7 6 1 6
தேசிய லொத்தர் சபை

## SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1984
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.01.23
தினம் திங்கட்கிழமை
Z 07 43 74 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,630,420/-

## சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.23
சீட்டிழுப்பு இல : 4145
வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,923,820/-
வெற்றி இலக்கங்கள்: 32 39 58 68
ஆங்கில எழுத்து: X

## ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,784,540/-
திகதி 2023-01-23
வெற்றி வாரம் 3696
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்: 13 21 32 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,275,520/-

## லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 16 21 34 36 64
சீட்டிழுப்பு வாரம் 1160
வர்ணம் இள நீலம்
திகதி 2023.01.23 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 300,368,316.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

## ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1890
சீட்டிழுப்பு திகதி 2023-01-23
வெற்றி இலக்கங்கள்: 12 18 50 59
ஆங்கில எழுத்து: Z
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 39,190,610/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

## அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1810
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.01.23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,087,780/-
வெற்றி இலக்கங்கள்: 34 43 55 56
ஆங்கில எழுத்து: M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு
# மணிவிழாக் காணும் நாயகன்



## திரு. கந்தையா தவயோகராசா
(இலங்கை ஆசிரியர் சேவை I)

### சேவைக்காலம்

| | |
|---|---|
| ப/கிளனனோர் தமிழ் வித்தியாலயம் அப்புத்தளை | 01.08.1986 - 31.01.1988 |
| ப/அப்புத்தளை தமிழ் வித்தியாலயம் இல II அப்புத்தளை | 01.02.1988 - 28.02.1989 |
| கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை யாழ்ப்பாணம் | 01.03.1989 - 31.12.1990 |
| ப/தொட்டுலாகல தமிழ் வித்தியாலயம் அப்புத்தளை | 01.01.1991 - 31.08.1994 |
| யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம் யாழ்ப்பாணம் | 01.09.1994 - 04.04.1999 |
| யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம் | 05.04.1999 - 14.02.2010 |
| யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம் யாழ்ப்பாணம் | 15.02.2010 - 31.08.2014 |
| யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம் | 01.09.2014 - 23.01.2023 |

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் புகழ் பூத்த மூத்த புலமை வழிகாட்டி ஆசிரியராக இப் பாடசாலையில் இருபது ஆண்டுகள் செப்பமாகத் தன் பணியைத் திருப்தியுடன் நிறைவேற்றி (23.01.2023) ஓய்வு பெறும் திரு. கந்தையா தவயோகராசா அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

(14347)

(ஆசிரியர் நலன்புரிக்கழகம்)
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை - சங்கத்தானை சாவகச்சேரி.

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14389)

**076 825 7716** (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

---

## காணியும் வீடும் விற்பனைக்கு

காங்கேசன்துறை யாழ்ப்பாணப் பிரதான வீதியில் பொலிஸ் ஆஸ்பத்திரிக்கு எதிர்ப்பக்கமாக குரு வீதிக்கு அருகாமையில் தெற்கு பக்கம் இரண்டு பரப்பு காணியும் தற்போது உபயோகத்தில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 353 5822 / 071 860 6576 (14320)

---

## விற்பனைக்கு

80′ x10′ நீளமுள்ள கோழிக்கூடு (நிலக்கூடு), பாவித்த யன்னல் (கிறீலுடன்) நிலை, கதவு (முதிரை), 4′ அகலமுள்ள Gate, புதிய Vacum Cleaner ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இல : **077 699 8683** (14379)

---

உ
ஓம் சக்தி

## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் – 2023

நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் தைமாதம் 13ஆம் நாள் (27.01.2023) வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவம் இடம் பெறும். இதனைத் தொடர்ந்து பத்து தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும். 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை தைப்பூரணையில் ஸ்ரீவசந்த நாகபுஷ்கரணி தீர்த்த தடாகத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

**தினசரி காலை 9.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும்**

விசேட உற்சவதினங்களில்

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | – | 27.01.2023 | வெள்ளி | காலை : 8.30 |
| வேட்டைத்திருவிழா | – | 02.02.2023 | வியாழன் | காலை : 8.30 |
| சப்பறத்திருவிழா | – | 03.02.2023 | வெள்ளி | காலை : 8.30 |
| தேர்த்திருவிழா | – | 04.02.2023 | சனி | காலை : 8.30 |
| தீர்த்தத்திருவிழா | – | 05.02.2023 | ஞாயிறு | காலை : 8.30 |

தேர்த்திருவிழா நிகழ்வுகள் 04.02.2023 அன்று காலை 8.30 மணியிலிருந்து நேரலையாக ஓம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும்.

தேவஸ்தானம்


(14352)

---

# 75வது பிறந்தநாள் நினைவுகளுடன்...

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும் சமாதான நீதவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் முன்னாள் வட பிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

# உயர்திரு. பொன்னுத்துரை மதிமுகராஜா



"தாயிற்சிறந்த கோவிலுமில்லை தந்தைசொல் மிக்க மந்திரமில்லை"

அப்பா அப்பா என்று கதறுகின்றோம்
உங்கள் செவிகளில் கேட்கவில்லையா?
பாவிகளாய் இருந்து பரிதவிக்கிறோம் அப்பா
ஒரு கூட்டில் வாழ்ந்த எம்மை விட்டு
எங்குதான் சென்றீர்கள் அப்பா!

களம் பல கண்டு
சிறை பல சென்று சொல்லொணாத் துன்பம்
அனுபவித்த தியாகி நீங்கள் அப்பா
பல ஆண்டு காலம் பொது வாழ்வுக்கு
சொந்தக்காரர் நீங்கள் அப்பா

எந்தவித பலனையும் எதிர்பாராமல்
இந்த இனத்துக்காக, தமிழ் மண்ணுக்காக
தமிழ் மொழிக்காக அல்லும் பகலும்
பாடுபட்ட ஒரு தலைவன் நீங்கள் அப்பா.

"நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
அங்கே தீமைகள் நுழைந்துவிடக் கூடாது"
என்ற எம்.ஜி.ஆர் இன் வார்த்தைகளை
வேதவாக்குகளாய்க் கொண்டு
சேவை செய்த உங்களை அழித்திட
எப்படி மனம் வந்ததோ அவர்களுக்கு?

(C-5838)

தாய்மடியில் உயிராய்
24.01.1948

தமிழ் மண்ணில் விதையாய்
26.12.1998

பொன் மதிமுகராஜா விஜயலக்ஸ்மி (மனைவி), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பொன் மதிமுகராஜா விஜயகாந்த் (தலைவர் - அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை சமூக சேவை அமைப்பாளர், யாழ்ப்பாணம், இலங்கை)
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.

அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி, பொதுப் பணிச் செயலகம்,
(கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி, யாழ்ப்பாணம், இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.